1986 நவம்பர் 19]

அரசு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டது. அது தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்ற விவரத்தை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி சம்பந்தப்பட்ட பிரச்சினையல்ல இது. இருந்தாலும் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன், திருநெல்வேலிக்கு நான் சென்றிருந்தபோது இது பற்றி விசாரித்தேன். அப்போது பாதியில் நிற்பதாக என்னிடத்திலே சொன்னார்கள். அதற்குத் தேவையான நிலம் கொஞ்சம் இன்னும் கையகப்படுத்தவேண்டிய நிலை இருக்கிறது என்று சொல்லியதாக எனக்கு நினைவு. எனவே அதுபற்றி தனியாக ஆய்வு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : பேரவைத் தலைநாயகர் அவர்களே, இந்த ரிங் ரோடு அமைக்கிறபோது பல்வேறு காரியங்கள் பாதிக்கப்படுகிற சூழ்நிலை தமிழகம் முழுவதும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் புழல் ஊரில் அண்ணாநகர், பர்மா நகர் போன்ற பகுதிகள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன. 20 ஆண்டுகளாக இருந்து வருகிற ஊர்களை எல்லாம் காலி செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே ஊர்களே இல்லாத பகுதியாகப் பார்த்து ரிங் ரோடு அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ? முடியவில்லை என்றால், அதை தவிர்க்க நடவடிக்கை எடுக்குமா ? (பதில் இல்லை).

தஞ்சை மாவட்டம், சீதக்கமங்கலம்—பம்மல் சாலையில்
திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே பாலம்.

85—(*வினா எண் 7983) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், சீதக்கமங்கலம் —பம்மல் சாலையில் திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் குடவாசல் ஒன்றியம் சீதக்க மங்கலம்—பம்மல் சாலையில் திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதன் மூலமாக பல நூற்றுக்கணக்கான குக்கிராமங் கள் இணைக்கப்படுகின்றன. அது மட்டும் அல்ல, தற்சமயம் 25 லட்சம் ரூபாய் அளவில் ஐவேஸ் துறையின் மூலமாக ஒரு பாலம் கட்டப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட குக்கிராமங்களை இணைக்கிற சாலைகளைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டாவது —வருகிற ஆண்டிலாவது எடுத்துக்கொண்டு பாலத்தைக் கட்டினால்தான் 25 லட்சம் ரூபாய் அளவில் செலவழித்து பாலம் கட்டுவதற்கான பயன் கிடைக்கும். வருகிற ஆண்டாவது பாலத்தைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்துத்தான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். வருகிற ஆண்டில் நிதிநிலை எப்படி இருக்கும் என்பதை இப்போது சொல்ல முடியாது. எல்லாப் பணிகளும் ஒன்றாக சேர்ந்து வருகிறபோது எது முக்கியமான பணி, எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறதோ அதை எல்லாம் பார்த்து தான் செய்ய வேண்டும். அந்தப் பட்டியலிலே இது வருகிற வாய்ப்பு இருந்தால் பிரச்சினை இருக்காது.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் ஐவேஸ் துறையின் மூலமாக பெரிய பாலங்கள் எத்தனை கட்டுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டம் முழுவதும் இருக்கிற நிலைமையைப் பொறுத்தவரையில் எவ்வளவு பாலங்கள் எடுக்கப்பட்டு இருக் கின்றன என்ற விவரம் இல்லை. இந்த பாலம் பற்றிய விவரம் மட்டும் தான் இப்போது இருக்கிறது. எனவே, தனியாக கேள்வி கேட்டால் முழு விளக்கமும் தரப்படும்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுப் பாலம் கட்டுவதற்கான கேள்வி இது. ஆனால் பாலங்கள் கட்டுவதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டது சம்பந்தமாக கேள்வி கேட்க ஆசைப்படு கிறேன். நவம்பர் மாதம் 1985 ஆம் ஆண்டு வடஆற்காடு மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்டது. குறிப்பாக செஞ்சி, திண்டிவனம், மரக்காணம், மேல்மலையனூர், ஆகிய பகுதிகள் அப்போது வெகுவாக பாதிக்கப்பட்டன. நிவாரணப் பணிக் காகவும், சாலை, பாலங்கள் சீரமைப்புக்காகவும், ஏராளமான நிதியை மத்திய அரசு வழங்கியது. அந்தப் பாலங்களை

1986 நவம்பர் 19]

புதியதாக கட்ட டெண்டர் போட்டப்பட்டு பணியும் ஆரம்பிக்கப் பட்டது. தற்சமயம் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. இந்தப் பணிகள் துரிதமாக நடைபெறாமல் இருப்பது கவலைக்குரிய ஒன்றாகும். அதிகாரிகளுக்கும், காண்டிராக்டர்களுக்கும் இடையே தகராறு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மேலும் அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்படுகிற காரணத்தால் இந்த வேலைகள் எல்லாம் நடைபெறாமல் ஆரம்ப நிலை யிலேயே இருக்கிறது என்ற கவலை இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கவலையை நீக்கி அங்கே பணிகள் துரிதமாக நடப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விகள் எல்லாம் சுத்தமாக மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாதவை. இருந்தாலும் பொதுவான விளக்கங்களை மட்டும் என்னால் தர முடியும். குறிப்பிட்ட பாலத்தைப் பொறுத்த வரையில் என்ன நிலைமை என்பதற்கான விவரம் இல்லாத காரணத்தால் இப்போது என்னால் சொல்ல முடியாது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி சட்டமன்றத்தில் வரட்டும் என்று காத்து இருக்காமல் எங்களிடத்திலே சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கும். அதிகாரிகள் மாற்றப் படுகிற காரணத்தால் வேலைகள் நிற்கின்றன என்று சொல்ல முடியாது. ஒரு அதிகாரி போய் இன்னொரு அதிகாரி வந்தால் உடனடியாக அந்த வேலைகளை எல்லாம் தொடங்குவதற்கான ஏற்பாடுகளை அவர்கள் தொடர்ந்து செய்யக் கடமைப்பட்டிருக் கிறார்கள். அப்படி யாராவது உங்களிடத்தில் தவறாகச் சொல்லியிருந்தால் அதை நீங்கள் திருத்திக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஏதேனும் காலதாமதம் இருந்தால் துரிதமான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யலாம்.

சென்னை வியாசர்பாடியில் புதிய இரயில் நிலையம்

86—(*வினா எண் 8605) திரு. பரிதி இளம்வழுதி : மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை–திருவள்ளூர் பிரிவில் வியாசர்பாடி அருகே புதிய இரயில் நிலையம் ஒன்று ஏற்படுத்திட மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : பேசின் பாலம் மற்றும் பெரம்பூர் இரயில் நிலையங்களுக்கிடையில் வியாசர்பாடியில் புதிதாக இரயில் நிலையம் ஒன்று அமைத்திடும் பணி விரைவாக நடந்துவருகிறது. இவ்வருட இறுதிக்குள் இப்புதிய இரயில் நிலையம் செயல்படத் தொடங்கும் என இரயில்வே நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.